சுருக்கம்

பொதுப் பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை பணி நியமனம் – பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை – திரு.பொ.ச.செல்வகுமார், இளநிலை உதவியாளர், த/பெ. (அமரர்) திரு.பொ.சண்முகசுந்தரபாண்டியன் – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி1) துறை

அரசாணை (2ப) எண்.4

நாள் 13.01.2020
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி, மார்கழி – 28

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள் 03.08.1977.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
3. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கடித எண். 74308/டதொ.4/இரு.3/2015, நாள் 08.10.2019.

*****

ஆணை:

திரு.பொ.சண்முகசுந்தரபாண்டியன் என்பவர் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் சங்கரன்கோவில் சுகாதார மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகத்தில் ஊர்தி ஓட்டுநராகப் பணியாற்றி வரும்போது 14.07.2005 அன்று காலமானார். மறைந்த அரசு ஊழியரின் மகன் திரு.பொ.ச.செல்வகுமார் என்பவர், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ததன் பேரில், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 30.08.2018 அன்று முற்பகல் சங்கரன்கோவில் சுகாதாரப் பகுதி மாவட்டம், வடமலாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியில் இணைந்தார் எனத் தெரிவித்துள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், தனியரின் பணியினை, அவர் வகிக்கும் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் இணைந்த நாளான 30.08.2018 அன்று முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.பொ.ச.செல்வகுமார் என்பவர் பற்றிய விபரங்கள், சான்றிதழ்கள் / ஆவணங்கள் ஆகியவை 03.08.2010 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் கடித எண்.19205/க்யூ1/2010–2இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஆய்வு செய்த பின், மேலே இரண்டாவதாகப்

..2

படிக்கப்பட்ட அரசாணையின்படி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.பொ.ச.செல்வகுமார் என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 30.08.2018 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பதவிக்கான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்யலாம் என்று அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியினை முன்தேதியிட்டு வரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண்.24744/கூ1/2019-1, நாள் 30.12.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.43549/ஜி2/2019-1, நாள் 06.01.2020 ஆகியவற்றின் ஒப்புதலோடு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பீலா ராஜேஷ்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை– 600 006.
தனியர், (இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை–600 006 வழியாக.)
மாநிலக் கணக்காயர், சென்னை– 600 018.
மாவட்ட கருவூல அலுவலர், திருநெல்வேலி மாவட்டம்.

நகல்
தொழிலாளர் மற்றும வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (துகவு பிரிவு) துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு /உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

Sd
13.1.2020

2/10